ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஈசுவரனிடம் பயபக்தி எவ்வளவு இருக்கவேண்டுமோ அவ்வளவு அரசனிடமுமிருக்கவேண்டுமென்பது நமது சாஸ்திரஸித்தாந்தமாகும். அரசன் ஈசுவரனுக்குப் பிரதிநிதியாகவிருந்துகொண்டு பிரஜைகளை நீதி முறை வழுவாது பாதுகாக்கவேண்டும். தனது பிரயோஜனத்தையும் சிறிதுமெதிர்பாராமல் ஜனங்களின் நன்மையையே நாடிப்பிரவர்த்திக்க வேண்டும். இம்மாதிரியாக நமது பூர்வீக அரசர்கள் ஆண்டுவந்தார்கள். அவர்களின் உயர்ந்த அரசாக்ஷிமுறையையே நாமும் நிதர்சனமாக அமைத்துக்கொள்ளவேண்டும். ஸ்ரீமனு சொல்லியிருப்பதாவது "வருணாச்ரமதர்மத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக அரசனை ஈசுவரன் படைத்திருக்கிறான். இந்திரன், வாயு, ஸூரியன், அக்நி, வருணன், ஸோமன், குபேரன் இவர்களின் அம்சத்தால் அமைக்கப்பெற்றிருக்கிறான். ஸ்ரீமகாபாரதத்திலிருந்தும் அரசன், பிரஜை இவர்களுடைய முறைகள் விரிவாய் வெளியாகின்றன. இதிஹாஸங்களில் நல்ல அரசர்களின் அரசாக்ஷியில் ஜனங்களுக்குக் குறைவின்றி வாழ்வு கூறப்பட்டுள்ளது. ஆகவே ஜனங்களின் க்ஷேமத்திற்கு இராஜபக்தி மிக அவசியமாகும். அதுதான் க்ஷீணகதியையடைந்துவிட்டது. அத்தகைய ராஜவம்சமற்றுவிட்டதே அதற்குக் காரணம். அன்றியும் ஆழ்ந்த அறிவின்றி மேலெழுந்தவாறான அறிவு பரவும் பயனாக அரசாக்ஷி ஏற்படவே ஜனங்களுக்குள் அநேக விபரீத ஸம்பவங்களேற்பட்டுவிட்டன. பிரஜாதிபத்யத்துக்குரிய மந்திரிமஹாஸபையோ, ஜனப்ரதிநிதிஸபையோ, இவைகளெல்லாம் ஒருதலையாய் வரம்பு கடந்து காரியங்களைச்சட்டமாகச் செய்துவிடுவதால் அரசனின் வாஸ்தவகௌரவம்குன்றி மங்கிவிடுமன்றோ? இச்சபைகளில் அநுபவக்குறைவால் சுயநலத்தைக் கருதித் தீர்மானிக்கும் காரியங்களால்தான் நமக்குள் சீர்கேடேற்பட்டுவிட்டது. இவைகளுக்குப் பரிஹாரம் எப்படியென்றால், அரசன் மந்திரி முதலியவர்களுக்கும் ஜனப்பிரதிநிதிகளுக்கும் முன்போல் நேரான மனோபாவமும் சுருங்கச்சொல்லின் தேசஸம்பிரதாயத்தையும், பூர்வீக ராஜநெறியையும் மேன்மையான மார்க்கத்தில் நடைபெறும்வண்ணம் செய்வதுமேயாம்.

சுபம்!

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ மாசி-௴ ௨௨

விவாஹ காலம்.

நமது ஸநாதன வைதிகதர்மத்தின் அழகென்னவென்றால் அதனுசாரங்களை வர்ணம், ஆசிரமம் இவைகளை அனுஸரித்துக் கிரமமாகவே வேதங்களில் விதித்திருப்பதுதான். இத்தகைய கௌரவமும், அழகுமமைந்த தத்துவங்களை உள்ளடக்கிக்கொண்டிருக்கும்மதம் வேறொன்றுண்டோ? நமதுமதத்தில் தர்மதத்துவங்களை அனுஷ்டிப்பதற்கு நான்கு வருணங்களுக்கும் நான்கு ஆசிரமங்களுக்குந்தான் அதிகாரம். நமது வாழ்நாள் நான்கு ஆசிரமரூபமாக வகுக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் இவ்வாச்ரமங்களை ஒழுங்காகவும் ஒன்றன்பின்னொன்றாகவும் அனுஷ்டிக்கவேண்டுமென்பது பொதுவிதியாகும். அபக்குவமனமுடையவர்கள் இந்த ஆசிரமங்களில் ஒரு ஆசிரமத்தின் கடமைகள் முடிவுபெற்றவுடன் அடுத்த மற்றொரு ஆசிரமத்திற்குப் பிரவேசிப்பதில் அர்ஹராவார்கள். இவ்விதமே ஜீவராசிகளின் அபிவிருத்தியைக் குறித்து மனுவானவர் நான்கு ஆசிரமங்களைத் துவக்கம்பண்ணி "வேதாத்தியயனம் செய்யாமலும், புத்ரோத்பத்தி பண்ணாமலும், யக்ஞம் முதலிய நித்தியகர்மங்களைச் செய்யாமலும் மேலான மோக்ஷத்தையடைய முயல்வது தாழ்ந்தஸ்திதியைத்தான் அளிக்கு"மென்று பகன்றுள்ளார். ஆகவே கிரமமாக ஆசிரமங்களையடைவதுதான் யாவருக்கும் சுலபமானது. அத்தியயனத்தாலும் அதற்குறிய விரதங்களாலும் பிரம்மசர்யாசிரமத்தைக் குருகுலத்தில் நடத்திவிட்டுப் பிறகு தன்னால் இயன்றமட்டில் குருதக்ஷிணை ஸமர்ப்பித்துவிட்டு, அவரனுமதியின்பேரில் கிருஹஸ்தாசிரமத்தையடையவேண்டும் என்ற விருப்பத்துடன் தனது கிருஹத்துக்குத் திரும்பி குலசீல வயோவித்யை முதலியவைகளால் தனக்கு ஸமானமாயிருக்கும் ஒரு ஸ்திரீயை மந்திரபூர்வகமாகவும், அக்னிஸாக்ஷியாகவும் சாஸ்திரவிஹிதகாலத்தில் விவாஹஞ்செய்துகொண்டு இஹபர ஸாதனங்

களைத்தேடிக்கொள்ளவேண்டுமேயொழிய இஷ்டப்பட்ட ஸ்திரீயை இஷ்டப்பட்ட காலத்தில் இஷ்டப்படி இழுத்துக்கொண்டுவிட்டால் அவளைக்கொண்டு இஹலோகபோகமேற்படும்படி செய்துகொண்டாலும் பரலோக சுகஸாதனங்களை ஸம்பாதித்துக்கொள்ளமுடியாது. விவாகமென்ற கர்மாவுக்கு வைதிககாரியங்களைச் செய்வதுதான் முக்கிய பிரயோஜனமென்று பன்முறை இப்பத்திரிகைவாயிலாகவே யாவருமறிந்திருக்கலாமன்றோ? ஆகவே அத்தகைய விவாஹத்தையனுஷ்டிப்பதிலும் அகாலத்தில் அனுஷ்டிப்பதும் அனுசிதமேயாகும். காலந்தவறியனுஷ்டிக்கப்படும் லௌகிக காரியங்களுக்குங்கூடப் பயனில்லையென்றால் வைதிககாரியங்களுக்குச் சொல்லவும் வேண்டுமோ? காலந்தவறி அனுஷ்டிக்கப்படும் தர்மங்கள் அதர்மங்களேயாகும். ஸந்தியாவந்தனம்முதலிய காரியங்களுக்குக்காலம் சாஸ்திரங்களில் விஹிதமாயிருப்பதுபோல் இவ்விவாஹத்திற்கும் காலவிசேஷம் விதிக்கப்பட்டிருக்கிறது. சாஸ்திரீயகர்மாக்களுக்கெல்லாம் 'திரவ்யம், காலம், திரவ்யத்தைப் பெற்றுக்கொள்பவன்' என்ற மூன்று வஸ்து பிரதானமாகும். அதிலும் மற்ற இரண்டுகளைவிட காலமே மிகவும் பிரதானமாகும். காலமென்பதும் கௌணகாலமென்றும், முக்கியகாலமென்றும் இரண்டுவிதமாகும். அவ்விதமே திரவ்யத்திற்கும் முக்கியமென்றும், கௌணமென்றும் பேதமுண்டு. ஆகவே முக்கிய காலத்தில் கௌண (பிரதிநிதி) திரவியத்தைக்கொண்டாவது அனுஷ்டிக்கப்படும் கர்மா முக்கியமாகவே ஸித்தித்துவிடும். திரவ்யம் கௌணமாயிருப்பதுபற்றி கர்மா கௌணமாக ஆவதில்லை. கௌணகாலத்தில் முக்கிய திரவியத்தைக்கொண்டு கர்மாவையனுஷ்டித்தாலும் கர்மா கௌணமாகவேதான் ஸித்திக்கும். திரவியம் முக்கியமாய் இருப்பதுபற்றி கர்மா முக்கியம் என்று ஸித்திக்காது. ஆகையால் கர்மா முக்கியம் என்றும் கௌணம் என்றும் ஸித்திப்பதற்கு முக்கிய கௌணகாலந்தான் பிரதான காரணமாகுமேயொழிய திரவ்யமன்று. ஆகையால்தான் மனு முதலிய மகரிஷிகளனைவரும் 'முக்கியமாகத் திரவ்யம் கிடைக்கவில்லையே' என்ற காரணத்தால் முக்கிய காலத்தைத் தவறிவிடக்கூடாது. முக்கிய காலத்திலேயே பிரதிநிதி திரவ்யத்தைக்கொண்டாவது கர்மாக்களைச் செய்துவிடவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகையால் கர்மாக்களையனுஷ்டிப்பதற்குக் காலந்தான் மிகப் பிர

தானமென்றேற்படவே விவாஹத்திற்கு முக்கியகாலமென்னவென்றும் கௌணகாலமென்னவென்றும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அதிலும் உத்தராயணகாலம் சுக்ராஸ்தமனமற்ற காலம், நல்ல தினம், சுபலக்கினம் இவைமுதலிய ஸாமான்யகாலத்தைவிட வதூவரர்களின் வயோவடிவகாலத்தைத்தான் நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். அதிலுங்கூட வரனுடைய விவாஹவயதைத் தெரிந்துகொள்வதைவிட ஸ்திரீகளுடைய விவாஹவயதைத் தெரிந்துகொள்வதுதான் மிகவும் முக்கியமாகும். ஏனென்றால் வதூவரர்களிருவரையாச்ரயித்துக் கொண்டேதான் விவாஹமென்பது ஸித்திக்குமானாலும் இவ்விருவர்களுக்குள் புருஷர்களுக்குக் காம்யமாகவும், ஸ்திரீகளுக்கு நித்தியமாகவும் விவாஹம் அமையப்பெற்றிருக்கிறது. இப்படி இருவர்களை அவலம்பித்துக்கொண்டு ஒருவருக்கு காம்யமாகவும் மற்றொருவருக்கு நித்தியமாகவுமுள்ள கர்மாக்களனேகமுண்டு. அதுபோலிது புருஷர்களுக்குக் காம்யமென்றும், ஸ்திரீகளுக்கு நித்தியமென்றும் சாஸ்திரஸித்தாந்தமாகும். எவருக்கு விவாஹம் காம்யமோ அவருக்கு வயதை சாஸ்திரங்களும் கூட நிர்ப்பந்தமாய் நியமம் பண்ணமுடியாது. எப்போது விவாஹத்தில் ஆவலுண்டாகுமோ அதுதான் புருஷர்களுக்கு விவாஹகாலம். காம்யகர்மாக்களில் காமமூலமாகவேயல்லவா பிரவிருத்தி சாஸ்திரசம்பிரதாயம் விவாஹத்தில் ஆவல் ஒருவனுக்கு இல்லாமலிருக்குமேயானால் அவன் வானப்ரஸ்தாச்ரமத்தையோ அல்லது பரமஹம்ஸாசிரமத்தையோ அவலம்பிக்கவேண்டும். அல்லது உயிருள்ள வரையில் பிரும்மசாரியாகவே இருந்தாலும் இருக்கலாம். ஆதலால் புருஷர்களின் விவாஹவயதைநிர்ணயிப்பது அனுவச்யமேயாகும். ஸ்திரீகளுக்கு அவ்விதமல்ல. ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்தியமல்லவா. மனு முதலிய ஸ்மிருதிக்காரர்கள் எல்லாரும் ஒரேவிதமாய் ஸ்திரீவிவாஹத்தை உபனயந ஸ்தானமாகவும், செய்யாவிட்டால் தோஷமுண்டென்பதாகவும், உத்கோஷித்திருப்பதால் அதை நித்தியமென்றுதான் ஒப்பவேண்டும். இவ்விஷயம் அந்த ஸ்மிருதிகளைக்கண்டால் விரிவாய்ப் புலப்படும்.

ஆகவே அவர்களுக்கு எந்தவயதில் விவாஹம் செய்விக்க வேண்டுமென்பதை சாஸ்திரங்களைக்கொண்டு விசாரிக்கும்போது எட்டாவது வயது ஸ்திரீவிவாஹத்திற்கு முக்கியகாலமென்றும்

அதற்குமேல் ருதுவுக்கு முந்தி, கௌணகாலமென்றும், வெளியாகிறது. இந்த சாஸ்திரஸித்தமாயிருக்கும் காலவிசேஷத்தில் தான் தற்காலத்திய நவீன சில மேதாவிகள் சாஸ்திரங்கள் அப்படி இல்லையென்றும், ருதுவுக்குப் பிறகு செய்வதுதான் ஸௌகரியத்திற்கு ஒத்ததாகுமென்றும், அதற்கும் சாஸ்திரங்கள் இடம் கொடுக்கின்றனவென்றும், பலவாறாக முறையிட்டு சட்டமிட்டு விட்டார்கள். ஆனால் சாஸ்திரங்கள் ருதுவுக்குப் பின்பு விவாஹம் செய்வதற்கு ஒருபோதும் இடம் கொடுக்கவில்லை, இவர்கள் அபிப்பிராயப்படும் சௌகரியங்களும் பாலிகாவிவாஹத்தாலும் ஏற்படலாம். முறட்டுத்தனமாக இவர்கள் செய்யும் காரியத்தை பன்முறைக் கண்டித்திருக்கிறோம். இனியும் கண்டனம் செய்வோம். இவ்வளவு தூரம் அவர்களுக்கு நற்புத்திபுகட்டியும் ஏற்படவில்லை. இந்த நவீனர்கள் ஒன்றுகூடி அரசாங்க சட்டமாக ஏற்படுத்தியிருக்கும் இக்காரியத்தால் ஜனங்களுக்குள் என்ன என்ன ஆபத்துக்களுண்டாகுமோ அறியவில்லை. ஆனால் ஆர்யதர்மாபிமானிகளே! அனாதிகாலமாக ஏற்பட்டிருக்கும் இவ்விவாகத்தை வழக்கப்படி செய்வதாகவே நிச்சயித்துக்கொள்ளுங்கள். அதிலிருந்து உண்டாகும் ஆபத்துக்களை பகவான் விலக்கிவிடுவார். புது வழக்கம் செய்யாதீர்கள். அதனால் அனேக ஆபத்துக்கள் விளையுமென்பது திண்ணம். ஆகவே ஆஸ்திக பிராமணர்களுக்கு பகவானைத் தவிர வேறொருவர் தற்போது கதியில்லை. எதற்காக சுக்லஹு பங்குனிமீ த்துக்குள் விவாஹம் செய்ய வேண்டும் என்று பறக்கிறீர்கள். அதற்குப் பின்பும் நமது புராதனவழக்கப்படி விவாஹத்தை ஸாவதானமாய் செய்வதில் என்னபயம். பயப்படாதீர்கள். வழக்கத்தை மாற்றிவிடாமல் செய்யுங்கள். ஆபத்துக்களைச் சிறிதும் லக்ஷியம்செய்யாதீர்கள். சாஸ்திரங்களைப் பிரதானமாக அவலம்பியுங்கள். சுபம்!

பத்திராதிபர்.

டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் கூற்று.

(32-வது பக்கத்தொடர்ச்சி)

ஹிந்து மதமென்றால் என்ன ஸ்வரூபமுடையது. அதின் இலக்கணம் டாக்டருக்குக் கொஞ்சமாவது தெரியுமா. ஒரு மதம் என்றால் அதற்குக் கடவுளும், மதநூல்களும், மதாசாரியர்களும் உண்டென்று மற்ற மதத்திலிருந்தாவது தெரிந்துகொண்டிருக்கிறாரா? நாளுக்குநாள் குறைந்து வருவது எதனால்? அதைத்தடுக்க இந்த டாக்டருக்கும் அதிகாரம் உண்டா ? இவைகளை இவர் ஆராய்ந்தால் 1-வது கேள்வியைப் பிறரை பார்த்துக்கேட்கத் துணியமாட்டார்.

2. ஹிந்துக்களின் தொகை குறைவது வாஸ்தவம். அது எதனால். அதைத் தடுக்க யாருக்குமட்டிலும் அதிகாரம் என்று சொல்கிறார்.

3. வது கேள்வியும் சரியே. இவ்விதம் கணக்குத்தெரிந்த டாக்டர் இதுகாறும் சிலரையாவது திருப்பியிருக்கிறாரா ? இது இவரது வேலை இல்லையோ.

4. அவர்கள் நம்மைச்சார்ந்தவர்களே. மதத்தின் பெயரால் தீண்டாதவர்களென்றும் கருதுவதும் வாஸ்தவம். அதற்காக மதம் கெட்டதென்று வைகிறாரா ? வைதிகர்களை வைகிறாரா? வைதிகர்களை என்றால் மதசாஸ்திரம் சொல்லுகிறபடி அனுஷ்டிக்கும் எங்களுக்கு அவ்வசவு சாரா.

5. இதற்கு வைதிகர் ஒன்றும் செய்யவில்லை என்கிறார். லௌகிகரான டாக்டர் என்ன செய்தாரோ.

6. நந்தனாரைப்பற்றியும் திருப்பாணாழ்வாரைப் பற்றியும் நாங்கள் அனுதினமும் புகழ்வோம். அதற்காக அவர்கள் பிறந்த குலத்தைப் போற்றமாட்டோம். குலம் சாஸ்திரீயப்படி தீண்டத்தகாததே.

अर्चामस्सततं गणाधिपमथाप्याखून् निहन्मश्शतं
ध्यायामो हृदि भैरवं तदपि तु प्रोत्सारयामश्शुनः ।
भूतेशं प्रणुमस्तथापि शतशो भूतान्निगृह्णीमहे
नह्येकस्य गुणः परस्य महतो दोषानपि प्रोर्णुते ॥

எப்போதும் நாம் கணபதியை அர்ச்சிப்போம். ஆயினும் அவாது வாகனத்தை அடிப்போம். பைரவரை அனுதினமும் தியானிப்போம். ஆனால் அவாது வாகனத்தை அடித்து விரட்டுவோம். பூதேசனான சிவனை வணங்குவோம். ஆயினும் பூதங்களை விரட்டுவோம். ஒருவனுடைய குணம் பிறனது தோஷத்தை மூடிவிடுமோ என்று ஆன்றோர் கூறியதைக் கவனிக்கட்டும். இனி ஸ்ரீ மகாவிஷ்ணுவராகாவதாரம் எடுத்ததை உத்தேசித்து வாரகங்களையும் அவைகளைப் போஷிப்பவர்களையும் பூசிக்கவேண்டுமென்று டாக்டர் சொல்லலாம். ஆகவே வரம்பின்றிப்பேசும் பேச்சுக்குபதில் கூறமுடியாது.

பிறகு ஸ்திரீகளுக்கு படிப்பில்லாமற் போய்விட்டதென்று மிக வருந்துகின்றனர். படிப்பில்லாமற் போனதால் ஏற்பட்ட கஷ்டம் என்னவோ தெரியவில்லை. ஒருசமயம் ஸ்திரீகளும் படித்திருந்தால் டாக்டரைபோன்ற படித்தவர்களால் இப்போது நம் மதத்திற்கு என்னென்ன அனுகூலம் நேர்ந்திருக்கின்றதோ அது அவர்களாலும் சுலபமாய் நேரலாமென்று எதிர்பார்க்கலாம். அவர்களுக்குப் படிப்பில்லாததால் கலைஞான அபிவிருத்தியும் மதவிஷயங்களும் தெரிந்துகொண்டிருப்பார்களாம். டாக்டர் தற்காலம் தன் கலைஞான அபிவிருத்தியையும் தன் மத ஞானத்தையும் தன் வீட்டுப் பெண்டீர்களுக்காவது கற்றுக்கொடுத்திருக்கலாமென்றும், அதன்படி இருவரும் ஒழுகலாமென்றும் யாவரும் நினைக்கலாம். ஆனால் இவர் அறிந்திருக்கும் மதவிஷய ஞானத்தை எத்தனை மதாசார்யர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று மட்டிலும் டாக்டரைக் கேட்டுத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். ஏதோ இதற்குமுன் இவர்வைதிகப்பற்றுள்ளவராய் இருந்தாராம். இப்போது இவ்விதம் மாறினதைப்பற்றி யாரோ கேட்டாராம். அதற்கு பதில் டாக்டர் கூறுவது இது.

நான் பத்து வருடங்களுக்கு முன்பு வெளியிட்டதற்குமாறாக இப்பொழுது வாதிக்கிறேனென்று என்மேல் சிலர்குறைகூறுகிறார்கள். அந்த குற்றத்தைஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால்அதற்கு சில காரணங்களுண்டு. நாளடைவில் நான் அடைந்த அனுபவத்தால் நான் முன் ஆதரித்ததுத் தவறென்றும் இப்பொழுது கருதுகிறேன். தவறை மறைப்பதுதான் வெறுக்கத்தக்கது. அதைவெளியிடுவது குற்றமன்று என்பதே

ஆரியர்களே ! டாக்டரின் பேச்சைக்கவனியுங்கள். முன் சரியென்று ஒப்புக்கொண்டாராம் இப்போது அது தவறென்று தெரிந்துகொண்டு அதைப்பழிக்கிறாராம். நாளை இவரது மனம் என்ன செய்யப்போகிறதோ. இவர் நம் மதத்தை நிலைநிறுத்த வந்தாராம். வைதிகர்கள் வேஷக்காரர்களாம். இதை புத்திமான்கள் தெரிந்துகொள்ளட்டும். கடைசியில் ஒன்று சாரமாய்க்கூறுகிறார். அதைமட்டிலும் கூறிவிட்டு பிரயோசனமற்ற இவ்வாதத்தை ஒழிப்போம்.

அதிவைதிகரான பண்டிட் மதன்மோஹனமாளவ்யாவே பெண் மணவயதைப் பன்னிரண்டாக ஒப்புக்கொண்டார். வைதிகர்களுடைய ஆதரவைப் பெற அவர் எண்ணினார். ஆனால் தென் இந்தியா வைதீகர்கள் அதைக்கூட ஒப்பமாட்டார்கள். நமது பண்டிதர்களுடன் தீண்டாமையைப்பற்றி அவர் கலந்து பேசினதிலிருந்தே அதை அவர் அறிந்திருக்கலாம். பண்டிதாயினும் சரி, பண்டிதரல்லாதவரானாலும் சரி. பழக்கங்களுக்கும் அனுதியான குருட்டு நம்பிக்கைகளுக்கும் அடிமைப்பட்டவர்களிடம் ஒழுங்கான மனோபாவத்தை எதிர்பார்ப்பது தவறு என்று.

ஸ்னேஹிதர்களே ! டாக்டரின் வார்த்தையைக் கவனியுங்கள். நாம்தான் கேட்பதற்கு பதில் சொல்லத் தெரியாமல் திட்ட ஆரம்பிப்போமாம், இந்த லௌகிகர் பேசுவது வசவல்லவென்று நினைப்பு. இதிருக்கட்டும்.

மாளவ்யா அதிவைதிகராம். இதை இவருக்கு யார் சொல்லிக்கொடுத்தார்கள். வைதிகர் என்றால் அர்த்தமென்ன. லௌகிகரென்றால் என்னவென்பது டாக்டருக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. ஏதோ தெரிந்தவர்போல் பேசுகிறதால் பிறர் அதைக் கண்டு மயங்காவண்ணம் கூறுகின்றேன். வேதசாஸ்திரானுஷ்டானமுள்ளவன் வைதிகன். இதன்படி பார்த்தால் மாளவ்யா பண்டித ரத்னமாய் இருந்தாலும் தற்காலம் வேதசாஸ்திரத்திற்கு விரோதமான அனுஷ்டானத்தைக் கைக்கொண்டுவிட்டார். அவர் ஹிந்துமஹாஸபையை ஸ்தாபித்திருக்கிறார். அது வேதவிரோதமான ஆர்யஸமாஜம் போலவே வேலை செய்கிறது. ஆகவே அவ்விரண்டு சபைக்கும் பெயர்தான் வித்தியாசம். தீண்டாதவர்களுக்கு பிரணவஸஹிதமாய் மந்திரோபதேசம்செய்து அவர்களுடன் கூடலாமென்று கல்கத்தா காங்கிரஸ் காலத்திலேயே பதினாயிரக்

கணக்கான தீண்டாதவர்களுக்கு சந்தியில் உபதேசம் செய்தார். இவ்விதம் செய்யக்கூடாதென்று அவர் ஏற்படுத்திய ஸபையிலே யே இருந்த பண்டிதர்கள் யாவரும் கூறினர். அதற்கு பதில் சொல்லாமலே தன் இஷ்டப்படி நடத்தினர். சென்னையில் காங் கிரஸ் நடந்தகாலத்தில் திருவல்லிக்கேணியில் நடந்த வர்ணாச்ரம ஸபையில் வந்து எங்களையெல்லாம் 1-மணி நேரம் துதித்துவிட்டு உபன்யாஸமும் செய்துவிட்டு தீண்டத்தகாதவர்களைப் பற்றிச்சில ஸந்தேஹங்களைக் கேட்க சாயந்திரம் அவசியம் வருகிறேனென்று சொல்லி வெகுநேரம் நாங்கள் காத்திருந்தும் வாராமற் போய்விட் டார். இதெல்லாம் டாக்டருக்கு எப்படித்தெரியும். ஆகவே இவ் விஷயத்தில் உங்களுக்கு மட்டிலும் அவர் குருவாக இருக்கட்டும். சாஸ்திரவிஷயத்தில் அவர் ஒருபோதும் பிரமாணமாகமாட்டார். எல்லாம்தெரிந்தவர்போல் எங்களைப்பழிக்கவரவேண்டாம். வேதா னுஷ்டானமெல்லாம் குருட்டு நம்பிக்கையென்று தெரிந்துகொ ண்ட டாக்டர்களுக்கு இந்தவுபதேசம் பயன்படுமோ என்னவோ? இன்னொன்று நம்மைப் பரிஹஸிக்கிறர். பால்ய விவாஹம் செய்து நாம் ஜெயிலில் போய் அங்கு தீண்டாதவர்களிடமிருந்து உணவு பெறுவோமாம். வைதிகச்சின்னங்களை விட்டுவிடுவோமாம். தர்ப் பணம் சிராத்தம் முதலியவைகளை விட்டுவோமாம். திரும்புகாலத் தில் பிராயச்சித்தமின்றி தீர்த்தமாடாமலும் ஜாதிக்கட்டில்சேர்ந்து கொள்வோமாம்.

ஆஸ்திகர்களே! டாக்டர் ஆரம்பம் முதலே முன்பின்விரோத மாயும் ஒன்றும் தெரியாதவராயும் குழந்தைப்பிள்ளை போல் பேசு கிறர். நீங்கள் இதை நம்பித் தயங்கவேண்டாம். அங்கு நமக்கு தீண்டாதவர்களிடமிருந்து உணவு வாராது. இவ்விவாஹ விஷய மாய் ஜெயில் செல்கிறவர்கள் பரம வைதீகோத்தமர்கள் தான். இவர்களுக்கு சிறைவாசம் 1-மாதம்தான். காங்கிரஸ்காரர்கள் ஏதோகாரணத்தால் ஜெயில் சென்று காலவரை இன்றி தீண்டாத வர்கள் கொடுப்பதை புசித்துக்கொண்டிருப்பதுபோலல்ல. நாம் பாலும் பழமும் சாப்பிட்டுக்கொண்டு 1-மாதத்தைப்போக்கலாம். ஜெயில் அதிகாரிகள் நமக்கு உணவுகொடுக்கவேண்டாம். நம்சில விசிருந்து தருவித்துக்கொள்ளலாம். நமதுகுடுமியை அறுக்கவோ மொட்டைஅடிக்கவோ நமக்குவேண்டாம். நாகரீகக்குடுமி நமக்கு

கிடையாது. பிறகுதர்ப்பணம்சிராத்தம்நேர்ந்திருந்துவிட்டுப்போய் இருந்தால் அதற்கு அவசியம் ஸேதுஸ்னானம் செய்து பிராயச்சித்தம் செய்து கொள்வோம். டாக்டர் ஒரு சமயம் ராஜீய குற்றத்திற்காக ஜெயிலில் சென்று பிறகு இவ்விதம் நடந்தாரோ யாதோ தெரியவில்லை.

இன்னொன்று டாக்டர் கூறுகிறார். இந்த சட்டத்தால் பால்ய விதவைகள் அவசியம் ஒழிந்தே போகுமென்று ஓலமிடுகிறார். இங்கு நான் கூறுகிறேன். இந்த சட்டத்தின்மூலம் இனி விதவைகளின் ஸங்கியையே வரவரக்குறைந்துபோய் விடலாம். எவ்விதமெனில் 14-வயதுக்கப்புறம் கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டுமென்பதே ஏற்படாததால் விவாஹம்செய்துகொள்ளாதவர்களுக்கு வைதவ்யம் கிடையாது. கல்யாணம் செய்துகொண்டவர்கள் அறுத்துப்போனால் புருஷர்களுக்குப்போல்அவர்களுக்கும் விவாஹம் நடந்தேதீரும். ஆகவே நம் தேசத்தில் இனி ஸ்திரீகள் யாவரும் நித்தியசுமங்கலிகள்தான். டாக்டர் யோஜனை மிகவழகு.

N. M. சுப்பிரமணியசாஸ்திரி.

விளம்பரம்.

இவ்வருஷம், தர்மக்ஞ கிருஹ்யக்ஞ பரீக்ஷைகள் வட ஆற்காடுஜில்லா போளூருக்கு ஸமீபத்தில் ஸ்ரீமடம் ஸமஸ்தானம் விஜயமாயிருக்கும் ஸ்தலத்தில் நாளது சுக்லஹு, மாசிமீ, 15உ முதல் நான்குதினங்களில் நடைபெறும். பரீக்ஷைக்கு வரும் பண்டிதர்கள் போளூர் பாஸ்கர பந்துலு அவர்களிடம்ஸ்ரீமடம்முகாம் ஸ்தலத்தை விசாரித்துக்கொண்டு வரவேண்டியது.

சுக்கிலஹு } தைமீ 29உ

இங்ஙனம்
K. குப்புஸ்வாமி அய்யர்,
ஸ்ரீகாரியம் அண்டு ஏஜண்டு.

इति हि ज्योतिषे शास्त्रे श्राद्धाहतिथिसाधनम् ।
अह्नश्च पञ्चमो भागः अह्नोऽक्षांश इतीरितः ॥८९॥

இவ்வாறு சோதிடத்தில் சிராத்தத்திற்குரிய திதியறியும் முறை கூறப்பட்டுள்ளது. ஆகவே, பகல் மானத்தில் ஐந்து கூறு களில், ஒரு திதி நான்காவது பாகத்தை அதிகமாகத் தழுவிநிற் கின்ற நாளே சிராத்தத்திற்குரிய நாளாகும். (89)

द्वेधास्थाप्यः सचांशस्स्यादित्यर्थस्याद्विधा पदम् ।
गुण्यश्चतुर्भिस्तत्रैकः इत्युक्तावेदनिघ्नता ॥ ९० ॥

शिष्टं स्पष्टं हि निगदव्याख्या तत्वेन धीमताम् ।
एवं ज्यौतिषशास्त्रोक्तवर्त्मना श्राद्धमाचरेत् ॥९१॥

तस्यैव कालनिर्णीतावैदंपर्यं विदन्बुधः ।
तस्मादह्नि पञ्चांशे तुर्ये यत्राधिका तिथिः ॥९२॥

सैवापराह्णिकी वेद्या महत्त्वमपि तद्भवम् ।
उभयत्र तथात्वे तु महत्त्वेन विनिर्णयः ॥ ९३ ॥

इत्युक्तिरपि तुर्यांशव्याप्त्याधिक्येन नीयताम् ।
पञ्चभागेषु तुर्याङ्गी तिथियोगेन नीयताम् ॥ ९४ ॥

अधिकं त्वत्रवक्तव्यमन्यत्रैव प्रपञ्चितम् ।
इदं तु सुखबोधार्थेत्यास्तां सर्वं समञ्जसम् ॥९५॥

இந்த திதியே அன்று அபரான்னவ்யாப்த்திபெற்றதிதி. இந்த திதியின் வ்யாப்தி அளவே நிச்சயித்தறியப்படவேண்டும். இரண்டு நாட்களில் அபரான்ன வ்யாப்த்திபெற்ற திதியைமுற்கூறியமுறை ப்படி கண்டுகொள்க.

இவ்விஷயத்தில் இதினுமதிகம் வேறு நூற்களில் விரித் துரைக்கப்பட்டிருத்தலால் சிறியோரும் எளிதில் அறியும்படி எல் லாம் பொருந்த இங்கு இஃதுரைத்தோமென்க. (95)

इति कौशिकगोत्रेण श्रीगोविन्दार्य सूनुना ।
श्रीवेङ्कटेशपादाब्जसमाराधनकारिणा ॥ ९६ ॥

तद्दत्तवेदवेदान्त देशिकाख्येन धीमता ।
सर्वतन्त्रस्वतन्त्रेण गर्भचक्राङ्कजन्मना ॥९७॥
श्री वैखानस निष्ठेन श्रीनिवासाख्ययज्वना ।
रचिता परिपूर्णेयं तिथिनिर्णयकारिका ॥९८॥

॥ इति तिथिनिर्णयकारिका समाप्ता ॥

கௌசிககோத்திரத்தினரும், ஸ்ரீகோவிந்தாசாரியரின் புதல்வரும்,
ஸ்ரீவேங்கடேசமலாடிகளை வழிபட்டவரும் அவராலளிக்கப்
பெற்ற வேதவேதாந்ததேசிக பட்டத்தைப் பெற்றவரும்
நுண்ணறிவாளரும், ஸர்வதந்திர ஸ்வதந்திரரும்,
பிறக்கும்பொழுதே சக்ராங்கிதரும், ஸ்ரீவைகா
னஸமதக்கொள்கையையநுஸரித்தவருமான
ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் செய்தருளிய
திதிநிர்ணயகாரிகை
முற்றிற்று.

कारिका.	अशुद्धम्.	शुद्धम्.	कारिका.	अशुद्धम्.	शुद्धम्.
११	दृष्टुः	(शुद्धिः) द्रष्टुः	,,	சிரார்த்த	சிராத்தம்
२१	तथैवाध्यर्थ	तथैवाध्यर्ध	३४	च्छेत्	चेत्
16–17	மாறுபாடுத்தி	மாறுபடுத்தி		शिष्ठःनुष्ठानु	शिष्टानुष्टानु-गामिभिः
19	அர்த்தாதி போகம்	அர்த்தாதிக போகம்	३५	प्रह्य	ग्राह्य
२२	तस्माद्ध्यर्थ-	तस्माद्ध्यर्ध	३६½	स्थिति	स्थितिः
,,	विनिर्णयः-	विनिर्णये	४०	श्राद्धाले	श्राद्धकाले
२६	व्यतीपातानि-	व्यतीपातादि	४१	गौकाले	गौणकाले
२९	तिथि	तिथिः	६४	रौद्रश्वेतंच	रौद्रःश्वेतश्च
३२	द्वैथं	द्वैधं	७४	प्रशष्यते	प्रशस्यते

அதாவது "ஸ்நானம், ஸந்தியாவந்தனம், ஜபம், ஹோமம், பூஜை முதலிய நற்காரியங்கள் முன்காலத்தில் யாதொன்றுமில்லவேயில்லை. வெகுகாலங்கழிந்தவுடன் மஹரிஷிகள் ஸ்நானம் முதலிய காரியங்களை ஒவ்வொன்றாக அனுஷ்டிப்பதற்கு ஆரம்பித்துவிடவே அவற்றில் சில குணங்களிருப்பதாகக் கண்டுகொண்டார்கள். பிறகுதான் அவையெல்லாவற்றையும், அனுஷ்டானத்தில் வைத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு தமது ஸ்மிருதிக்ரந்தங்களிலும், 'விஹிதங்க'ளென்று எழுதிவிட்டனர்" என்று கல்பிக்கமுடியாதா? ஆகவே விஹிதமென்றும், நிஷித்தமென்றும் சொல்லப்படும் ஸகல காரியங்களுமே தர்க்கமூலமாகவே நமது முன்னோர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அநுஷ்டிக்கப்பட்டனவென்றொப்புக்கொள்ளும்படி நேரிடும். இவ்விதம் தர்க்கமூலமாகவே தான் நமது முன்னோர்கள் தர்மாதர்மங்களை அறிந்துகொண்டார்களென்றே அங்கீகரித்துவிடக்கூடாதாவென்றால் நமது தர்க்கத்தையனுஸரித்துத்தான் தர்மசாஸ்திரவசனங்களுக்கும் அர்த்தம் சொல்லவேண்டுமென்பது நிர்ணயிக்கப்படும்பக்ஷத்தில் அவ்வண்ணமே அங்கீகரித்துவிடலாம். தர்க்கத்தையனுஸரித்து சாஸ்திரங்களுக்கு அர்த்தநிர்ணயம் செய்துகொள்ளும்பக்ஷத்தில் அச்சாஸ்திரங்களுக்கும் மூலமாகிய தர்க்கமாத்திரத்தாலேயே விஹிதநிஷித்தவ்யவஸ்தை ஏற்பட்டுவிடுவதால் சாஸ்திரங்களனைத்தும் விஷயமின்றி நிஷ்பலமாக ஏற்பட்டுவிடும். இதுவரையில் இத்தகைய தர்க்கநிபுணர்கள் இவ்வுலகத்தில் அவதரிக்காமலிருந்ததால்தான் நமக்கு சாஸ்திரங்களைப்பிரமாணமாக நம்பும்படி நேரிட்டது. இப்பொழுது இவர்கள் அவதரித்துவிட்டதால் இனி நமக்கு சாஸ்திரங்கள் அவச்யமேயில்லையல்லவா? ஆகையால் தர்க்கானுஸாரமாக சாஸ்திரார்த்தங்களை தாறுமாறாக மாற்றிவிடுவது நியாயமில்லை. மேலும் ஸ்திரீகள் விஷயத்தில் காருண்யம் தமக்கு அதிகமிருப்பதாக அபிநயம் பண்ணுவதன்பொருட்டு "ஆதிகாலத்து ஸ்திரீகள் ஸ்வதந்த்ரர்களாகவே ஸர்வவிஷயங்களிலும் விளங்கிவந்தார்கள்" என்ற தர்க்கமூலமாக தற்காலத்து ஸ்திரீகளுக்கும் ஸ்வாதந்த்ர்யத்தை அங்கீகரித்துவிடும்பக்ஷத்தில் அதனால் சாஸ்திரங்களெல்லாம் நிஷ்பலமாக முடிந்துவிடுமென்பதுமன்றி ஸ்ரீ பகவத்கீதையில் ஸ்ரீகண்ணபிரானால் எடுத்துரைக்கப்பட்ட ஜாதிஸாங்கர்யமும் ஏற்பட்டுவிடும். தர்மாதர்மமென்னும் ஸேதுவுமழிந்து

விடும். அனேக நியமங்களை ஏற்படுத்தியும், நாநாவிதப் பிரயத்தினத்தையவலம்பித்துக்கொண்டும் நம்மால் ஸ்திரீகள் ஸம்ரக்ஷிக்கப்பட்டுவரும்போதே சில ஸ்திரீகளிடத்தில் தோஷம்ஸம்பவித்துவிடுவது நமக்கு அனுபவஸித்தமாயிருப்பதால் ஸ்வதந்திரப்ரசாரத்தையும் அவர்களுக்கு அங்கீகரித்துவிடும்பக்ஷத்தில் தோஷம் அதிகரித்துவிடுமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? மேலும் ஸ்திரீகளுக்கு ஸ்வதந்த்ரப்பிரசாரத்தை தர்மம்போல் உபதேசித்துவரும் தற்காலத்து நவீன மேதாவிகளும் "பிறருக்கு உபதேசம் செய்வதற்காகவே பாண்டித்யம்" என்ற பழமொழிப்படி ஸ்வதந்திரப்பிரசாரம் என்னும் இத்தர்மோபதேசத்தை பிறருடைய மனைவிகளிடத்தில் செய்துவருகின்றனரேயன்றி தம்முடைய ஸ்திரீகளை ஸ்வதந்திரமாக ஸஞ்சரிக்கும்படி விடும்பக்ஷத்தில் வ்யபிசாரதோஷம் ஏற்பட்டுவிடுமோவென்று சங்கித்துக்கொண்டு வெகு ஜாக்கிரதையாகவே பாதுகார்த்துக்கொண்டுவருகிறார்கள். அவர்களிடம் தமது தர்மதத்துவோபதேசம் கொஞ்சங்கூட பயன் படுவதில்லை.

இவ்விஷயத்தையே "ஸ்திரீகளை ஸம்ரக்ஷித்துக்கொள்ளுதல் எல்லா ஜாதிகளுக்கும் பொதுவான உத்தமதர்மமாதலால் துர்பலர்களாகவிருக்கும் 'குநடர்' முதலியவர்களுங்கூட தமது மனைவியை ஸம்ரக்ஷித்துக்கொள்ளும் விஷயத்தில் அதிக யத்தினத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று மனுவும் அறிவித்திருக்கின்றார். ஆகையால் வ்யபிசாரதோஷம் அணுகாமலிருப்பதற்கும், ஜாதிவ்யவஸ்தை மாறாமலிருப்பதற்கும், தர்மாதர்மங்கள் வ்யவஸ்திதமாக நிலைத்திருப்பதற்கும் ஸ்திரீரக்ஷணம் அவச்யம் என்பதற்கு அவரவர்களின் மனச்சாக்ஷியே பிரமாணமென்று ஸித்தமாயிற்று.

ஸ்திரீகளுக்கு விவாஹம்காம்யமா ? நித்யமா? என்ற விசாரம்.

ச்ரௌதஸ்மார்த்தாதி கர்மாக்களை ஸ்திரீகள் மூலமாகத்தான் அனுஷ்டிக்க வேண்டுமென்பது சாஸ்திரவாயிலாக ஸித்தித்துவிட்டாலுங்கூட தமக்கிஷ்டப்பட்ட ஒரு ஸ்திரீயை அக்னி ஸாக்ஷியாகவும் மந்திரபூர்வகமாகவும் விவாஹம் செய்துகொள்ளாமல் தமது மனைவியாக நினைத்துக்கொள்வதால் மட்டிலும் அவள் மனைவியாக ஏற்படமாட்டாள். அவளைக்கொண்டு செய்யப்படும் வைதிக

கர்மாக்களும் நிஷ்ப்ரயோஜனமாகத்தான் முடியுமாதலால் வைதிக தர்மங்களைகுறைவின்றி சாஸ்திரவிதிப்படி அனுஷ்டித்து அதன் பிரயோஜனங்களை அனுபவிப்பதன் பொருட்டு அக்னிஸாக்ஷியாகவும் மந்திரபூர்வகமாகவும். விவாஹம் என்ற ஸம்ஸ்கார மூலமாகவேதான் யாவரும் ஸ்திரீகளை ஸ்வீகரித்துக்கொள்ள வேண்டும். இத்தகைய ஸ்திரீவிவாஹமும், ஸ்திரீகளுக்கு ஸம்ஸ்காரரூபமாக சாஸ்திரங்களில் விதித்திருப்பதால், அதை சாஸ்திரவிஹிதமாயுள்ள கால விசேஷத்தில் அனுஷ்டிப்பதுதான் தர்மமாகும். இன்றேல் அகாலத்திலனுஷ்டிக்கப்பட்ட அவ்விவாஹ ஸம்ஸ்காரம் அதர்மமேயாகும். சாஸ்திரீயமாயுள்ள கர்மாக்களனைத்துமே சாஸ்திர விஹிதமாயுள்ள காலவிசேஷத்தில் செய்யப்பட்டால்தான் தர்மமெனப்படும். இல்லாவிட்டால் அகாலத்தில் அனுஷ்டிக்கப்பட்ட அவை எல்லாம் அதர்மமேயாகுமன்றோ? கர்மகாலமென்பது முக்கியம் என்றும் கௌணமென்றும் இருவிதம். கர்மாக்களில் காலந்தான் பிரதானமேயன்றி திரவியம் பிரதானமன்று ஆகவே கௌண (பிரதிநிதி)திரவியத்தைக்கொண்டும் முக்கிய காலத்தில்கர்மாக்களை அனுஷ்டித்துவிட்டாலும் கர்மாக்கள் முக்கியமாகவே ஸித்தித்துவிடும். திரவியம் கௌணமாயிருப்பதுபற்றி கர்மாக்கள் கௌணமாக ஸித்தித்துவிடுவதில்லை. காலம் கௌணமாயிருக்குமேயானால் அக்கௌணகாலத்தில் முக்கிய திரவியத்தைக்கொண்டு செய்யப்படும் கர்மாக்களுங்கூட கௌணமென்றுதானே ஏற்பட்டுவிடும். ஆகவே திரவியம் முக்கியமாகவோ, கௌணமாகவோ எவ்விதம் இருந்தாலும் காலம் முக்கியமாக இருக்கும்பக்ஷத்தில், கர்மாக்களுக்கு முக்யத்வம் ஸித்திக்குமேயன்றி காலம் முக்கியமாகவில்லாமல் கௌணமாயிருந்து திரவியம் மட்டிலும் முக்கியமாகவிருந்தாலும் கர்மாக்களுக்கு முக்கியத்வமில்லை. இக்காரணத்தாலேயே தான், மஹரிஷிகளும், "(முக்கியதிரவியம் கிடைக்காதபக்ஷத்தில்) கௌண திரவியத்தைக்கொண்டாவது (பிரதிநிதிதிரவித்தை கொண்டாவது) முக்கியகாலத்திலேயே கர்மாக்களை அனுஷ்டிக்க வேண்டும். "திரவியம் முக்கியமாக இல்லையே அது கிடைக்கட்டும் என்ற லோப (ஆசை) குணத்தால், முக்கியகாலத்தை அதிக்ரமித்து) கௌண காலத்தை கர்மாக்களை அனுஷ்டிக்கவேண்டி, எதிர்பார்க்கக்கூடா" தென்ற வசனத்தால், முக்கியகாலத்தைத் தவாலாகாதென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே கர்மாக்

களுக்கு சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கும் அங்கங்களுக்குள் (ஸாதநங்களு)க்குள், காலமென்ற அங்கந்தான் பிரபலமாயுள்ளது என்பது சாஸ்திரங்களின் தாத்பர்யமாகும். ஆதலால் விவாஹமென்ற சாஸ்திரீய ஸம்ஸ்காரகாரியத்திலுங்கூட முக்கியகாலம் இன்னதென்றும், கௌணகாலமின்னதென்றும் முதலில் விசாரித்துநிர்ணயித்துக்கொள்ளவேண்டியதுமிகவும்பிரதானமாகும். அதிலும் விவாஹத்திற்கு சாஸ்திரஸித்தமாயுள்ள "உத்தராயணகாலம் "நல்ல லக்னம்" "சுக்கிரமௌட்யமில்லாதமாதம்" இவை முதலிய ஸாதாரணகால விசாரத்தைவிட விவாஹத்தில் பிரதானங்கமாயிருக்கும். வதூவரர்களின் வயது என்ற காலவிசேஷத்தையே முதலில் விசாரிக்கத் தொடங்குவாம். சாஸ்திரங்களில் வதூவரர்களென்ற இருவர்களை அவலம்பித்துக்கொண்டுதான் விவாஹ ஸம்ஸ்காரத்திற்கு ஸ்வரூபம் ஸித்திப்பதாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும் அவ்விருவர்களுக்குள் ஒருவருக்கு நித்தியமாகவும்,மற்றொருவருக்கு காம்யமாகவும்தான் இவ்விவாஹத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமேயொழிய, அவ்விருவதூவரர்களுக்கும் இதைப் பொதுவாக நித்யமென்றுவது, காம்யமென்றுவது ஒரேவிதமாக அங்கீகரித்துவிடுவதற்கு இயலாததால், வதுவுக்கு, (பெண்களுக்கு) நித்யமாகவும், வரனுக்கு காம்யமாகவும்தான் இதை நிர்ணயித்துக் கொள்ளல்வேண்டும். இவ்விதமாகவே இரண்டுபேர்களை ஆச்ரயித்துக்கொண்டு விதிக்கப்படும் கர்மாக்களனேகமிருப்பதாக சாஸ்திரங்களில் காணப்படுகின்றன. அதாவது சிராத்தம் முதலிய காரியங்கள் கர்த்தா, போக்தா, என்றிருவர்களை ஆச்ரயித்துக் கொண்டிருப்பது யாவருக்கும் பிரத்யக்ஷம். அவ்விதமிருந்தாலும் "தந்தையின் மிருததினத்தில் (மரணத்தையடைந்த தினத்தன்று) சிராத்தம் செய்யாதவன் அநேககோடி ஜன்மங்களில் சண்டாளனாக ஜனித்துவிடுவான்" என்று தர்மசாஸ்திரங்களில் சிராத்தம் செய்யாமலிருப்பவனுக்கு தோஷம் விதிக்கப்பட்டிருப்பதால் கர்த்தாவுக்கு நித்தியமென்றும், தக்ஷிணையிலும், போஜனத்திலும் ஆசையிருந்தால் போக்தாவிற்கு சிராத்தத்தில் ஸம்பந்தம் உண்டு. அவைகளில் ஆசையில்லாவிட்டால் ஸம்மந்தமும் அவசியமில்லையென்று போக்தாவிற்கு இச்சையை அநுசரித்து சிராத்த ஸம்பந்தத்தை விதித்திருப்பதால் அவனுக்குகாம்யமென்றும் இரு